செ.வெ.எண்: 528/2017 நாள்: 7.11.2017

# திருக்கார்த்திகை தீபத்திருவிழா - 2017
# புதிய மொபைல் ஆப் (Mobile App) அறிமுகம்
# மாவட்ட ஆட்சித் தலைவர் பேட்டி...

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேவரர் திருக்கோயில் தீபத்திருவிழா - 2017 நவம்பர் 23-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, டிசம்பர் 2-ம் தேதி அதிகாலை 4.00 மணிக்கு பரணி தீப தரிசனமும், மாலை 6.00 மணிக்கு மகா தீப தரிசனமும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று (7.11.2017) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுரர் திருக்கோயில் உள்துறை அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பொ.இரத்தினசாமி, திருக்கோயில் இணை ஆணையர் திரு.ஜெகன்னாதன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ரங்கராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.லோகநாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.ஜானதி, உதவி காவல் கண்காணிப்பாளர் திருமதி.ரவளிப்பிரியா, இ.கா.ப., நகராட்சி ஆணையாளர் திருமதி.பாரிஜாதம், வருவாய் கோட்ட அலுவலர் செல்வி.உமாமகேஸ்வரி இராமச்சந்திரன், அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவிக்கையில் ‘உலக பிரசித்தி பெற்ற அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா - 2017 முன்னிட்டு திருவண்ணாமலைக்கு பல்வேறு மாவட்டகள், மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக மாவட்ட நிர்வாகம், திருக்கோயில், காவலத்துறை, நகராட்சி, உட்பட அனைத்து துறைகளின் மூலமாக முன்னேற்பாடு பணிகள் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு துறைகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. திருவண்ணாமலைக்கு வெளி மாவட்டகளிலிருந்து வரும் சாலைகளை சீரமைக்கப்படவுள்ளது. பேருந்துகளில் வரும் பக்தர்களுக்காக 16 தற்காலிக பேருந்த நிலையங்கள் அமைக்கப்படுகிறது. இதில் 9 தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து கிரிவலப் பாதை சாலை இணைக்கும் இடங்களுக்கு தொடர் பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. இப்பேருந்துகளில் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், அனைத்து பேருந்து நிலையங்களிலும் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறை, தெரு விளக்குகள் அமைக்கப்படும், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் உணவகம் மற்றும் மருத்துவ முகாம் அனைத்து பேருந்து தற்காலிக நிலையங்களிலும் அமைக்கப்படுகிறது.

பாதுகாப்பு பணியில் வனத்துறை சார்பாக 300 பணியாளர்களும், காவல் துறை சார்பாக 9400 பணியாளர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மேலும், சிறப்பு இரயில்கள் மற்றும் பேருந்துகள் பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்தும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிரிவலப் பாதையில் குப்பைகள் அதிகளவில் கொட்டப்படுவதால், அதிளவில் குப்பை தொட்டிகள் வைக்கப்படவுள்ளது. கிரிவலப் பாதை மற்றும் சாலைகளில் அன்னதானம் வழங்க அனுமதி கிடையாது. அன்னதானம் வழங்குவதற்காக 6-7 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அந்த இடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க அனுமதி அளிக்கப்படும். பக்தர்களுக்கு வழங்கப்படும் அன்னதானம் சாலையில் போடப்பட்டு 40% உணவு வீணாகிறது. இதனால் கிரிவலம் வரும் பக்தர்கள் அதன் மீது நடக்கும் சூழ்நிலை உள்ளது. மகா தீபம் நடைபெறும் போது பக்தர்கள் மலை மேல் ஏறுவதற்கு தடை விதிக்கப்படுகிறது, மலையில் ஏறக்கூடிய 9 பாதைகளும் அடைக்கப்படும். வயதானவர்கள் மலை ஏறுவதால் உயிரிழப்புகள் ஏற்படுகிறது. பக்தர்களின் பாதுகாப்பிற்காகவும், மனித உயிரிழப்பை தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் புதிய அறிமுகமாக மொபைல் ஆப் (Mobile App) உருவாக்கப்பட்டு வருகிறது, விரைவில் வெளியிடப்படவுள்ளது. இந்த மொபைல் ஆப்-ல் திருக்கார்த்திகை தீபத்திருவிழா குறித்த அனைத்து தகவல்களும் இடம்பெறவுள்ளது’ என்றார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தற்காலிக பேருந்து நிலையங்கள் மற்றும் கார் பார்கிங் இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**